## எனது கஷ்டமான நேரத்தில் ஸ்ரீ சாரதை என்னை எப்படிக் காப்பாற்றினார்?

அடிப்படையில் நான் ஒரு ப்ரீலான்ஸ் பத்திரிக்கையாளர். என் கணவர் மார்க்கெட்டிங் துறையில் இருக்கிறார். ஆனால் இரண்டு வருடங்களுக்கு முன்பு சற்றும் எதிர்பாராதவண்ணம் லே-ஆப் (LAYOFF) மூலமாக அவர் வேலையிழக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆறுமாதங்களுக்கும் மேலாக அவர் வேலையில்லாமல் இருந்தார்.

ஒரு மாதம், இரண்டு மாதம் வரைக்கும் வேலையிழப்பு எங்களைப் பெரிதாகப் பாதிக்கவில்லை. ஆனால் ஆறு மாதங்கள் கடந்தபிறகு பொருளாதார நெறுக்கடி எங்கள் கழுத்தை நெருக்கியது. புதிய வேலைக்கு எவ்வளவோ முயற்சித்தும் பலன் பூஜ்ஜியம்தான். பொருளாதாரச் சுமை ஒருபக்கம் என்றால் வேலை நிமித்தமாக தென்னிந்தியா முழுவதும் பயணப்பட்டுக்கொண்டே இருந்த என் கணவர் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தது அவருக்குக் கடும் மனஅழுத்தத்தைக் கொடுத்துவிட்டது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் என் பத்து வயது மகனுடைய தோழனின் அம்மா ஸ்ரீராமகிருஷ்ணமடத்தில் குழந்தைகளுக்காக பாலமந்திர் என்கிற ஆன்மீக வகுப்பு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடக்கிறது என்றும் தன் மகனை அதில் சேர்க்கப்போவதாகவும் என்னிடம் தெரிவித்தார். சரி, நம் பிள்ளையும் நல்லொழுக்கங்களை, நல்ல விஷயங்களை இதன்மூலம் கற்றுக்கொள்ள முடியுமே என்கிற எண்ணத்தில் என் மகனை அந்த வகுப்பில் சேர்த்துவிட்டேன். அதுவரை சென்னையிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ணமடத்தை ஒரு ஆன்மீக அடையாளமாக, சமய சமரசக் கோவிலாக மட்டுமே நான் அறிவேன். அதைத்தாண்டி அதனுடன் பெரிய பிணைப்பு எனக்கு எதுவும் இருந்ததில்லை.

ஆனால் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் நடந்த பாலமந்திர் வகுப்புகள் மூலமாக சுவாமி விமூர்த்தானந்தரை சந்திக்கும் வாய்ப்பு எனக்கும் என் கணவருக்கும் கிடைத்தது. எளிமையான அவரது அணுகுமுறையும், அன்பும், நம்பிக்கையும் கலந்த அவரது பேச்சும் எங்களைப் பெரிதும் ஈர்த்தன. அவர் மூலமே ஸ்ரீ சாரதை அன்னை என்கிற பேராற்றல் குறித்து எங்களுக்குத் தெரியவந்தது.

என் கணவர் வேலையிழந்தது குறித்து நான் ஒருமுறை ஸ்வாமிஜியிடம் சொல்லிக்கொண்டிருந்தேன். அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த அவர் சில வினாடிகள் கண்களை மூடியபடி இருந்தார். பின்னர் சட்டென்று “சாரதா அன்னையை வணங்கிவிட்டு வாருங்கள்” என்றார். எனக்கும், என் கணவருக்கும் ஒன்றும் புரியவில்லை. மனதில் பெரிய நம்பிக்கையெல்லாம் இல்லை. ஆனால் ஸ்வாமிஜி சொல்கிறாரே என்று அவரது வார்த்தைக்கு மரியாதை தரும் வண்ணம் கோவிலுக்குச் சென்று அந்தத் தாயின் திருவுருவப் படத்திற்கு முன்பு அமர்ந்தோம்.

ஆனால் அப்போது நடந்ததோ வேறு. துயரத்தில் இருக்கும்போது பிரியமானவரைச் சந்தித்தால் வெடித்து அழத் தோன்றுமே அப்படி ஒரு உணர்வு என் மனதிற்குள் வந்தது. என் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. அந்தக் கணம் அன்னையை என் அன்னையாக உணர ஆரம்பித்தேன். அழுதபடி நீண்ட நேரம் அவரை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்த நான் பின்னர் வீட்டுக்கு வந்துவிட்டேன். ஆனால் வீட்டிற்கு வந்த பிறகும் அன்னையின் நினைவுகள் என் மனதை விட்டு நீங்கவில்லை. அதற்குப்பிறகு தினமும் அன்னையைப் பார்க்கக் கோவிலுக்குச் சென்றுவிடுவேன். அவரது திருவுருவத்தைப் பார்த்து மனதிற்குள்ளேயே பேச ஆரம்பித்துவிடுவேன். அதுவும் எப்படி? ஒரு தாயிடம் மகள் பேசுவதுபோல......அழுவேன், புலம்புவேன், பிரார்த்திப்பேன்.....

“எனக்கு நீங்கள் ஏன் இன்னும் நல்லது செய்யவில்லை?” என்று அன்னையைக் கோபிக்கக்கூடச் செய்திருக்கிறேன். ஆனால் கோபித்துக்கொண்ட மறுநாளே மறுபடியும் அவரைப் பார்க்க ஓடுவேன். ஆனால் எவ்வளவுதான் கோபித்துக்கொண்டாலும் மாறாத புன்னகையுடன் அன்னை என்னை ஒவ்வொரு முறையும் வாஞ்சையுடன் வாரிக்கொள்வது போலத் தோன்றுமெனக்கு.

நாட்கள் இப்படியே கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்தன. கிடைப்பதற்கரிய பெரும்பேறாக ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களுக்கான முன்னெடுப்புகள், கருத்தரங்கங்கள், கலந்தாய்வுக் கூட்டங்கள் போன்றவற்றில் கலந்துகொள்ளும் வாய்ப்பு சாமானியவளாகிய எனக்கும் கிடைத்தன. அவை சார்ந்த கட்டுரைகளை எழுதும் வாய்ப்புக் கிடைத்ததோடு ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தின் நூறு ஆண்டு இதழ்களிலிருந்தும் மணிமணியான செய்திகளைத் தொகுக்கும் பாக்கியமும் கிடைத்ததால் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்தேன். அதிலும் ஸ்ரீராமகிருஷ்ணமடத்துடன் தொடர்பு ஏற்பட்ட மூன்று நான்கு மாதத்திற்குள்ளேயே இந்த வாய்ப்பு கிடைக்கிறதென்றால் அது சாட்சாத் அந்த அன்னை போட்ட பிச்சையே தவிர வேறெதுவாக இருக்கமுடியும்?

அதுவரை அன்னையிடம் புலம்பிக்கொண்டே இருந்தநான் அதன்பின்னர் “அம்மா உங்க அருளால எனக்கு இந்த வாய்ப்பு கிடைச்சது. இந்த எழுத்தாளரை இன்று சந்தித்தேன். ஸ்வாமிஜி என்னை இன்று பாராட்டினார்” என்று அன்னையிடம் தினமும் சந்தோஷமாகப் பேச ஆரம்பித்தேன். அதேபோல மற்ற தமிழ் பத்திரிகைகளுக்கு ப்ரீலான்ஸ் கட்டுரைகள் எழுதுவதற்கான வாய்ப்புக்களும் எனக்கு நிறையக் கிடைக்க ஆரம்பித்தன. இனம்புரியாத மகிழ்ச்சி எனக்குள் உண்டானது. என் மனதில் இருந்த வாழ்க்கை குறித்த நம்பிக்கையின்மை சர்வ வல்லமை பொருந்திய அந்தத் தாயால் துடைத்தெறியப்பட்டதை நான் கண்கூடாக உணர்ந்தேன்.

அன்னையின் அருளால் என்னுடைய கணவருக்கும் வேலை கிடைத்தது. மறுபடியும் மகிழ்ச்சியுடன் எங்கள் வாழ்க்கையை வாழ ஆரம்பித்தோம்.

ஆனால் கொரோனா பெருந்தொற்று ஏற்படுத்திய பொருளாதாரப் பாதிப்பால் பல நிறுவனங்கள் சம்பளக் குறைப்பு செய்தன அல்லவா? அதேபோல என் கணவர் வேலைபார்த்த நிறுவனமும் ஊழியர்களிடம் கணிசமான(சற்று அதிகமாகவே) சம்பளக் குறைப்பை மேற்கொண்டன. மற்ற எல்லோருக்கும் போலவே எங்களுக்கும் இது பாதிப்பை ஏற்படுத்தியது என்றாலும் இந்தமுறை நாங்கள் பதட்டமடையவில்லை. ஏனென்றால் எங்களுடன்தான் எங்கள் அன்னை இருக்கிறாரே? அதனால் “எல்லாவற்றையும் அம்மா பாத்துப்பாங்க..”. என்கிற நம்பிக்கை மற்றும் பிராத்தனையோடு பயணத்தை தொடர்ந்தோம்.

நீங்கள் நம்பினால் நம்புங்கள்...... என் கணவர் வேலை செய்யும் நிறுவனம் இத்தனை மாதங்களாக பிடித்தம் செய்த சம்பளம் பணம் முழுவதையும் இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒரு பைசா பாக்கியில்லாமல் எங்களுக்கு வழங்கிவிட்டது. எங்கள் கூடவே அன்னை பயணப்படுகிறார் என்பதற்கு இதைவிட வேறு என்ன சாட்சி இருந்துவிடமுடியும்?

“என்னைத்தவிர வேறொரு அம்மா இருக்கிறாளா என்ன? எல்லாப் பெண்களிலும் நானே இருக்கிறேன். யார் எங்கிருந்து வந்தாலும்சரி, அனைவரும் என் பிள்ளைகளே. இது உறுதியான சத்தியம். இதனைப் புரிந்துகொள். அம்மா என்று அழைத்துக்கொண்டு என்னிடம் வருபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அனைவரும் என் பிள்ளைகளே” என்கிறார் அன்னை ஸ்ரீ சாரதா தேவி.

இதற்கு உதாரணமாக அன்னை வாழ்வில் சம்பவம் ஒன்றும் நடந்திருக்கிறது. ஒருமுறை அன்னை சாரதா தேவி அவதரித்த ஸ்தலமான ஜெயராம்பதியிலிருந்து சில பக்தர்கள் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்த ஸ்தலமான காமர்புகூருக்குச் சென்று அந்தப் புனிதத் தலத்தை தரிசித்துவிட்டு இரவில் மறுபடியும் ஜெயராம்பதிக்குத் திரும்பியிருக்கின்றனர். அப்போது ஊரின் எல்லையில் லாந்தர் விளக்கை ஏந்தியபடி அன்னை சாராதா தேவி நின்றிருக்கிறார். இதைக்கண்ட பக்தர்கள் பதறியபடி “நீங்கள் ஏன் தாயே இங்கு நிற்கிறீர்கள்” என்று கேட்டனராம். “காரிருள் நேரத்தில் ஊர் திரும்புகிறீர்கள். எனவே இருட்டில் நீங்கள் பாதை மாறிப் போய்விட்டால் என்ன செய்வது என்று என் மனம் அடித்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டது. அதனால்தான் உங்களுக்காக விளக்கோடு இங்கே நான் காத்திருக்கிறேன்” என்று அன்னை பதிலுரைத்தாராம்.

இதுவல்லவோ தாய்மை. ஒரு அம்மாவைத் தவிர குழந்தைக்கு வேறு யாரால் நல்லது நினைத்துவிடமுடியும்? அதனால்தான் உலகத்திற்கே தாயான என் அன்னையிடம் நான் சரணடைந்துவிட்டேன். இனி என் வாழ்க்கையில் எவ்வளவு துயரங்கள் துரத்தினாலும்சரி, தோல்விகள் பயமுறுத்தினாலும்சரி, அனைத்தையும் ஒருகைபார்ப்பேன், என் அன்னையின் திருவடிகளைப் பற்றியபடி.....